வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 14.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அண்ணல் அம்பேத்கரின் 134 ஆவது பிறந்த தினம் இன்று நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.
- அம்பேத்கர் வாழ்க்கையின் சித்தாந்தம் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் உத்வேக தூணாக மாறி உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- தமிழ் புத்தாண்டு தினம் இன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.
- 3 புதிய குற்றவியல் சட்டங்களும், 21 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய சீர்திருத்தங்களாக உள்ளன என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

<u>அம்பேத்கர் (16)</u>

அண்ணல் அம்பேத்கரின் 134 ஆவது பிறந்த தினம் இன்று நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நாடாளுமன்ற வளாகத்தில் இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களவை தலைவர் திரு ஓம்பிர்லா, நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே, மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டு அண்ணல் அம்பேத்கருக்கு மரியாதை செலுத்தினர். இதனிடையே, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், பாபா சாகிப் அம்பேத்கர் தன்னுடைய சிறப்பான பணிகள் மூலம் உலகத்திற்கு ஒரு சிறந்த முன் உதாரணத்தை உருவாக்கி இருப்பதாக

தெரிவித்துள்ளார். பன்முகத் தன்மை கொண்ட டாக்டர் பி ஆர் அம்பேத்கர் பொருளாதாரம், கல்வி, நீதி உள்ளிட்ட துறைகளில் மிகப் பெரிய அளவில் சாதித்ததாகவும் புகழாரம் சூட்டினார். அண்ணல் அம்பேத்கரின் ஒவ்வொரு சாதனையும் இளம் தலைமுறையினருக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருப்பதாகவும் குடியரசு தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

<u>மோடி அம்பேத்கர் (9)</u>

பாரத ரத்னா பாபா சாகேப் டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் 134 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி நாட்டு மக்கள் அனைவரது சார்பாக அவருக்கு தலை வணங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

அம்பேத்கரின் உத்வேகத்தால் தான் இன்று சமூக நீதிக்கான கனவை நனவாக்குவதில் நாடு அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அவரது கொள்கைகளும் லட்சியங்களும் சுயசார்பு மற்றும் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கு தேவையான வலிமையையும், உத்வேத்தையும் அளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<u>எல். முருகன் (11)</u>

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கிய பாரத ரத்னா டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் பிறந்த நாளில் நாட்டு மக்கள் அனைவருக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். சமூக நீதியையும், சமத்துவத்தையும் நிறைவேற்றியவர் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் என்னும் அவரது எழுச்சியூட்டும் வாழ்க்கை இன்றைய தலைமுறையினருக்கு பாடமாக திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்தார். அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளில் அவரது

வாழ்க்கையை கற்பதன் மூலமும், அவரது கொள்கைகளை பின்பற்றுவதன் மூலமும் வலுவான மற்றும் வளமான இந்தியாவை உருவாக்க அனைவரும் உறுதி ஏற்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி அம்பேத்கர்* (16)

பாரத ரத்னா பி ஆர் அம்பேத்கரின் 134 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி, புதுச்சேரி சட்டப்பேரவை எதிரில் அமைந்துள்ள அவரது திரு உருவ சிலைக்கு அரசு சார்பில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு லட்சுமிநாராயணன், திரு சாய் சரவணன்குமார், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அவர்களை தொடர்ந்து திமுக சார்பில் மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான திரு சிவா தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கென்னடி, திரு சம்பத், திரு செந்தில்குமார் உள்ளிட்டோர் அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதேபோல் அஇஅதிமுக சார்பில் மாநில செயலாளர் திரு அன்பழகன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதேபோல் விடுதலை சிறுத்தை கட்சியினர், மதிமுக, அம்பேத்கர் அமைப்பினர் மற்றும் சமூக அமைப்பினர் ஊர்வலமாக சென்று அம்பேத்கரின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மோடி அரியானா (18)

அம்பேத்கர் வாழ்க்கையின் சித்தாந்தம் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் உத்வேக தூணாக மாறி உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று அரியானாவின் ஹிசார் விமான நிலையத்தில் இருந்து உத்தரபிரதேசத்தில் உள்ள அயோத்தி விமான நிலையத்திற்கு முதல் வணிக விமானத்தையும், பல்வேறு வளர்ச்சி திட்டங்களையும் தொடங்கி வைத்தார். அப்போது பேசிய அவர், டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் வாழ்க்கை மற்றும் சித்தாந்தம் தேசிய ஜனநாயக கூட்டணி தலைமையிலான அரசுக்கு ஒரு உத்வேத்தின் தூணாக மாறி உள்ளதாக கூறினார். ஏழைகள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதிவாசிகளுக்கு உதவுவதே அரசின் நோக்கம் என்று அவர் குறிப்பிட்டார். ஹரியானா மாநிலம் விரைவான தொடர்ச்சியான வளர்ச்சியை கானும் என்றும் பிரதமர் தெரிவித்தார். டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் பிறந்த தினம் தலித்துகள், ஒதுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய சமூகத்தினருக்கு ஒரு தீபாவளி போன்றது என்றும் தெரிவித்தார். முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி ஹிசாரில் இருந்து அயோத்திக்கு வணிக விமானத்தை கொடியசைத்து தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் 410 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள ஹிசார் விமான நிலையத்தின் விரிவாக்க கட்டிடத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

தமிழ் புத்தாண்டு (3)

தமிழ் புத்தாண்டு தினம் இன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டி, இன்று அதிகாலை முக்கிய ஆலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. தமிழ் புத்தாண்டு குறித்த ஒரு செய்தித் தொகுப்பு ……

வாய்ஸ் ()

தமிழ் புத்தாண்டு வாய்ஸ் (18)

சித்திரை மாதத்தின் முதல் நாள் தமிழ் புத்தாண்டு பிறப்பு தினமாக கொண்டாடப்படுகிறது. இந்தியா, இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் உள்ள தமிழர்களால் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. குரோதி ஆண்டு நிறைவு பெற்று, விசுவாவசு ஆண்டு பிறப்பதை முன்னிட்டு தமிழகம் முழுவதும் இன்று விழாக்கோலம் காணப்பட்டது. இல்லத்திலும், கோவில்களிலும் சிறப்பு வழிபாடுகள், பூஜைகள் நடைபெற்றன. பண்டைய காலத்தில் பங்குனி மாத இறுதியில் அல்லது சித்திரை முதல் நாளில் வேங்கை மரம் பூக்கும். இதையே தமிழ் புத்தாண்டின் தொடக்கமாக தமிழர்கள் கணக்கிடுகின்றனர். தமிழ் புத்தாண்டிற்கு முதல் நாள் வீட்டை தூய்மைப்படுத்தி அலங்கரிப்பது தமிழர்களின் வழக்கமாக இருந்து வருகிறது. மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள், தாம்பூலம், வெற்றிலை பாக்கு, மஞ்சள், குங்குமம், நகைகள், நெல் உள்ளிட்ட தானியங்கள் என்று மங்கல பொருட்களை வைத்தும் வழிபடுவது வழக்கமாக உள்ளது. புத்தாண்டில் அதிகாலையில் நீராடி, வாசலில் கோலமிட்டு, தமிழர்கள் புத்தாடை அணிவர். வாழக்கை என்பது இனிப்பும், கசப்பும் என்பதனை உணர்த்துவதற்காக காலை உணவில் வேப்பம்பூ பச்சடி, மாங்காய் பச்சடி கண்டிப்பாக இடம் பெறும். பின்னர் சிறியவர் முதல் பெரியவர் வரை கோவில்களுக்கு செல்வது வழக்கமாக உள்ளது.

அமித் ஷா (13)

3 புதிய குற்றவியல் சட்டங்களும், 21 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய சீர்திருத்தங்களாக உள்ளன என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார். அவர் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற அகில இந்திய தடய அறிவியல் உச்சி மாநாட்டில் பங்கேற்று பேசினார். நீதி தேடுபவர்களுக்கு சரியான நேரத்தில் நீதி கிடைப்பதையும், நீதி கிடைப்பதில் திருப்தி அடைவதையும் உறுதி செய்ய அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். நாட்டில் குற்றவியல் நீதி அமைப்பை

வலுப்படுத்துவதில் தடய அறிவியல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இதன் மூலம் பாதுகாப்பான மற்றும் திறமையான இந்தியாவை உருவாக்குவதே முக்கிய நோக்கம் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார். சரியான நேரத்தில் நீதி வழங்க வேண்டும், மரண தண்டனை விகிதத்தை அதிகரிக்க வேண்டும் என்றால் தடய அறிவியல் இல்லாமல் அது சாத்தியமில்லை என்றும் அவர் கூறினார்.

<u>வாழ்த்து</u> (18)

தமிழ் புத்தாண்டு, வைசாகி, விஷீ, பஹாக் பிஹீ, பொய்லா போயிஷாக், மேஷாதி உள்ளிட்ட புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு இந்தியாவிலும்,வெளிநாடுகளிலும் வாழும் அனைத்து இந்தியர்களுக்கும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அறுவடை நேரத்தில் கொண்டாடப்படும் இந்த பண்டிகைகள் நமது சமூக மரபுகளையும், வேற்றுமையில் ஒற்றுமையையும் குறிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த பண்டிகைகள் மூலம் நமது அண்ணதாதா விவசாயிகளின் கடின உழைப்பை மதித்து, அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்த புத்தாண்டு நல்ல ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டு வரட்டும் என கூறியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு எல் முருகன் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், தமிழ் புத்தாண்டு மலர்கின்ற இந்த நாளில் உலகமெங்கும் வாழ்கின்ற தமிழ் சொந்தங்கள் அனைவருக்கும் மனமார்ந்த தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

மெகுல் சோக்சி(7)

பஞ்சாப் நேஷனல் வங்கி கடன் மோசடி வழக்கில் தேடப்பட்டு வந்த பிரபல வைர வியாபாரி மெகுல் சோக்சி பெல்ஜியத்தில் போலீசாரால் கைது செய்யப்பட்டதாக மத்திய புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 65 வயதான அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாகவும், தற்போது அவர் சிறையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. உடல் நலக்குறைவு மற்றும் பிற காரணங்களை காட்டி அவர் ஜாமீன் கோருவார் என்றும் எதிர் பார்க்கப் படுகிறது.

தடைகாலம் (7)

நடப்பு ஆண்டு விசை படகுகளுக்கான மீன் பிடி தடைக்காலம் இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வருகிறது. மீன் இனத்தை பாதுகாக்கும் வகையில் இன்று முதல், வரும் ஜூன் மாதம் 14 ஆம் தேதி வரை 61 நாட்களுக்கு தடைக்காலம் அமல்படுத்தப்படுகிறது. இக்கால கட்டத்தில் நாட்டு படகுகள் மூலமும், சிறிய படகுகள் மூலமும் மீனவர்கள் வழக்கம் போல் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவார்கள். மீன்களின் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப் பட்டு வருகிறது.